அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**அ.எண்**:50/2017
**தேதி**:1.5.2017

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார்
அவர்களின் தொழிலாளர் தின வாழ்த்து செய்தி.

உழைக்கும் வர்க்கத்தினரை கௌவரவப்படுத்தும் விதமாகவும், அவர்களுக்கு மதிப்பு கொடுக்கும் விதமாகவும் கொண்டாடப்படுவது தொழிலாளர் தினம்.

தொழிலாளர்களின் உழைப்பால்தான் இந்த உலகம் இன்றுவரை இயங்கிவருகிறது. உலகம் தற்போது அதிநவீன முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு தொழிலாளர்களின் உழைப்பே மிகமுக்கிய காரணம். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாளர்களுக்கு நமது நாட்டில் முதன்முதலாக சென்னையில்தான் தொழிலாளர்தினம் கொண்டாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழிலாளிகள் இல்லையேல் நாட்டில் உற்பத்தி இல்லை, முன்னேற்றமும் ஏற்படாது என்பதை யாரும் மறுக்க முடியாது. நாட்டின் வளம் பெருக அவர்தம் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்.

சாதி, மதம், மொழி, இனம் இதற்கெல்லாம் அப்பாற்பட்டு உழைத்துக்கொண்டுவரும் அனைத்து தொழிலாளர்களுக்கும், உழைப்பவரே உயர்ந்தவர் என்ற தாரக மந்திரத்தோடு பயணித்துவரும் என் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்களின் சார்பாகவும் தொழிலாளர் தின நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்